முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 742**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.10.2021, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
பெருமைமிக்க ஞானயுகம் படைக்க
பேராசானாய் பிரம்ம சக்தியாய் வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆசியதும் பிலவ நங்கை திங்களில்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள், 10.10.2021 ஞாயிற்றுக்கிழமை)
அருளுவேன் அரங்கன் நீ கேட்க
3. வாசிவென்று உலக மக்களிடை
வரமருளி மற்றவரும் அழியாமை
ஆற்றல்பட பெறவேண்டி இந்த கலியுகத்தில்
அவதாரம் புரிந்த குருராஜனே
4. அரசனே உன் கொள்கை உலகை ஆளும்
அரசனே உன் தர்மம் உலகை வெல்லும்
வரமென உன்னுள் யானிருந்து வையகத்தை வழி நடத்தி வர
தர்மமென எந்த எல்லையில் தரணியோர் உன் நாமத்தில் செய்துகொண்டு வருகின்றனரோ
5. வருகின்ற திக்கெல்லாம்
வடிவேலன் யான் இரங்கி அருளாக பொழிந்து
அழியாமை தந்து உலகோர்க்கு அரங்கன் உன்வழி
உலகமாற்றம் செய்து அருள் புரிவேன்
6. அருளவே அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
ஆற்றல்மிக்க அரங்கன் உன் தர்மமே யுகத்தில் உயர்ந்த தர்மம்
மாற்றம் செய்யவேண்டியே உன்வழி
அற்புதத்தை யான் நடத்த
7. மக்களால் உன் சக்தி அறியப்படவே
அன்றுமுதல் உலகம் ஞானயுகமாற்றம் கண்டு
ஆற்றல்பட ஞான ஆட்சிக்கு தகுதிபெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–